**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**

**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**

**02 அக்டோபர் 2015 / 18 துல்ஹஜ் 1436**

# <u>கல்வியைத் தேடுவதில் நபி மூஸா (அலை) அவர்களின் முன்மாதிரியான வரலாறு - "அல்-கஹ்ஃபி" அத்தியாயத்தில் பெற வேண்டிய பாடங்கள்</u>

اَلْحَمْدُ للهِ الَّذِي أَحَاطَ بِكُلِّ شَيْءٍ عِلْمًا وَقَضَى بِمَا يُرِيْدُ حِكْمَةً
وَ حُكْمًا، أَنْعَمَ بِالنِّعَمِ ابْتِلَاءً وَامْتِحَانًا، وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللّٰهُ
وَحْدَهُ لاَ شَرِيْكَ لَه ذُو الْجَلَالِ وَالإِكْرَامِ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا
مُحَمَّدًا عَبْدُه وَرَسُوْلُهُ أَفْضَلُ الأَنَامِ وَ مِصْبَاحُ الظَّلَامِ، اَللَّهُمَّ
صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَ عَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا
كَثِيْرًا .أَمَّا بَعْدُ فَيَا أَيُّهَا النَّاسُ اتَّقُوْا اللَّهَ حَيْثُ مَا كُنْتُمْ، فَإِنَّ اللهَ
يَعْلَمُ سِرَّكُمْ وَ عَلَانِيَتَكُمْ

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான "தக்வா" (பக்தியை) உச்சகட்டமாக அடைய முயல்வோமாக! அல்லாஹ்வின் அனைத்து

கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு நடப்போமாக! அல்லாஹ் தடுத்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்தும் தவிர்ந்து கொள்வோமாக!

ஜமாஅத்தார்களே!

திருக்குர்ஆனின் "அல்-கஹ்ஃபி" எனும் அத்தியாயத்தின் கருத்துக்களை நாம் அறிந்து வருவதன் தொடர்ச்சியாக, அந்த அத்தியாயத்தில் காணப்படும் இறைத்தூதர் மூஸா (அலை) அவர்களின் வரலாற்றையும், கல்வியறிவு, மற்றும் நுட்பமான அறிவு (ஹிக்மத்) வழங்கப்பட்ட அல்லாஹ்வின் மற்றொரு அடியாரின் வரலாற்றையும் இன்று நாம் அறிந்து கொள்ள இருக்கின்றோம். அல்லாஹ்வின் அந்த மற்றொரு அடியார் இறைத்தூதர் "கிள்ர்" (அலை) ஆவார்கள் எனச் சில திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். இந்த வரலாறு "அல்-கஹ்ஃபி" அத்தியாயத்தின் 60-83 வரையிலான வசனங்களில் விளக்கப்பட்டுள்ளது.

இந்த வரலாற்றிலிருந்து நாம் பல்வேறு பாடங்கள் பெறக் கடமைப்பட்டுள்ளோம். குறிப்பாக, கல்வியறிவைத் தேடுவது சம்பந்தமானப் பாடங்களைப் பெறுவது அவசியமாகும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா "அல்-கஹ்ஃபி" அத்தியாயத்தின் 65-வது வசனத்தில் கூறும் பின்வரும் கருத்துக்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்:

فَوَجَدَا عَبْدًا مِّنْ عِبَادِنَآ ءَاتَيْنَٰهُ رَحْمَةً مِّنْ عِندِنَا وَعَلَّمْنَٰهُ مِن لَّدُنَّا عِلْمًا ﴿٦٥﴾

பொருள்: (அங்கே) நமது அடியார்களில் ஒருவரைக் கண்டனர். அவருக்கு நம் அருளை வழங்கினோம். அவருக்கு நாமே (ஒரு குறிப்பான) கல்வியையும் கற்றுக் கொடுத்தோம்.

மேற்கண்ட வசனத்தின் மூலம் கல்வியறிவுகள் அனைத்தும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவிடமிருந்து பெறப்படுகின்றன என்பதை நாம் அறியலாம். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா இறைத்தூதர் மூஸா (அலை) அவர்களுக்கு ”இல்ம்” (கல்வியறிவை) வழங்கியதைப் போல் இறைத்தூதர் ”கிள்ர்” (அலை) அவர்களுக்கும் குறிப்பானதொரு கல்வியறிவை வழங்கினான் என்பது மேற்கண்ட வசனத்தின் மூலம் புரிய வருகிறது.

நிச்சயமாக, அல்லாஹ், தான் நாடியவர்களுக்கு கல்வியறிவை வழங்கும் உரிமையைப் பெற்றுள்ளான். இறைத்தூதர் மூஸா (அலை) அவர்கள் ”உலுல் அஜ்ம்” எனப்படும் உறுதியான, மிகச் சிறந்த கல்வியறிவு பெற்ற இறைத்தூதர்களில் ஒருவராக இருந்த போதிலும், இறைத்தூதர் ”கிள்ர்” (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கல்வியறிவு மூஸா (அலை) அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்பது இந்த வரலாற்றின் மூலம் புரிகிறது.

இறைத்தூதர் ”கிள்ர்” (அலை) அவர்கள், இறைத்தூதர் மூஸா (அலை) அவர்களை பொறுமையாக இருக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். எனவே, ”நாம் அனைத்தையும் அறிந்து விட்டோம்” என்ற உணர்வு நமக்கு ஏற்பட்டு விடக் கூடாது என்பதை மேற்கண்ட வசனத்தின் மூலம் நாம் பாடமாகப் பெற வேண்டும். நினைவில் கொள்ளுங்கள்! அல்லாஹ்வின் அறிவு விசாலமானதாகும். நாம் அறியாத அல்லது நமது புலன்களுக்குப் புலப்படாத பல கல்வியறிவுகள், தகவல்கள் இருக்கலாம். நாம் அறியாத அக்கல்வியறிவுகள் மற்ற சிலருக்கு வழங்கப்பட்டிக்கலாம். அவர்கள் சிறு பிள்ளைகளாகவோ, இளைஞர்களாகவோ அல்லது மாணவர்களாகவோ

இருக்கலாம். நம்மிடம் தொழில் புரியும் வேலைக்காரர்களாகக் கூட இருக்கலாம்.

அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

قَالَ لَهُۥ مُوسَىٰ هَلْ أَتَّبِعُكَ عَلَىٰٓ أَن تُعَلِّمَنِ مِمَّا عُلِّمْتَ رُشْدًا ﴿٦٦﴾

பொருள்: மூஸா (மோசஸ்), அவரிடம் கேட்டார்: "தங்களுக்கு கற்றுத் தரப்பட்டிருக்கும் நல்லறிவை நீங்கள் எனக்குக் கற்றுத் தரும் பொருட்டு நான் உங்களைப் பின்பற்றி வரலாமா?" (அத்தியாயம்: அல்-கஹ்ஃபி, வசனம்: 66)

மேற்கண்ட வசனத்தில், ஒரு மாணவர் தனது ஆசிரியரிடம் எந்தளவு உச்சகட்டமான ஒழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டுமென்பதையும் அல்லாஹ் சுட்டிக் காட்டுகிறான். மூஸா (அலை) அவர்கள் "கிளர்" (அலை) உடைய மாணவராக இருக்க விரும்பிய போது முறைப்படி "கிள்ர்" (அலை) அவர்களிடம் அதற்கான அனுமதியைக் கேட்டார்கள். இது பணிவின் அடையாளமாகும். இன்று கவலைக்குரிய விஷயம் யாதெனில், நம்மில் சில தனிநபர்கள், எவ்விதமான உபதேசத்தையும் கேட்கத் தயாராக இல்லை. குறிப்பாக, உபதேசம் செய்பவர்கள் தம்மை விடக் குறைவான அந்தஸ்த்தில் இருந்தால் அல்லது உபதேசம் செய்பவர்களை, தம்மை விடக் கல்வியறிவில் குறைவானவர்கள் எனக் கருதினால் அவர்களின் உபதேசங்களைப் பொருட்படுத்துவதில்லை.

இவ்வாறு ஏன் நடைபெறுகின்றது? கர்வம் நம்மை மிகைத்து விட்டால், உண்மையில் நாம் யார் என்பதை மறந்து விடுவதற்கு அது காரணமாகி விடுகிறது. ஒரு கல்வியறிவுமிக்க மனிதர், அவருக்கு கருத்துக்களும்

விமர்சனங்களும் கிடைக்கும் போதெல்லாம் அவற்றின் மூலம் தன்னை மேற்கொண்டு முன்னேற்றிக் கொள்பவராக இருப்பார். உண்மையில், கல்வியறிவுமிக்க ஒரு நபர் பணிவு (தவாதுஃ) மிக்கவராகவும் காணப்படுவார். அவருக்கு எதிராகக் கூறப்படும் விமர்சனங்கள் முதற்கொண்டு அனைத்துக் கருத்துக்களையும் திறந்த மனதுடன் ஏற்றுக் கொள்பவராக இருப்பார். இறைத்தூதர் முஹம்மது (ஸல்) நவின்றுள்ளார்கள்:

”எவர் பணிவுடன் காணப்படுகிறாரோ அவரது அந்தஸ்தை அல்லாஹ் உயர்த்துவான்” (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்)

இதற்கு அடுத்த வசனத்தில், கல்வியறிவைத் தேட முயற்சிக்கும் நபரிடம் காணப்பட வேண்டிய ஒழுக்க மாண்புகளைப் பற்றி அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா பின்வருமாறு கூறுகின்றான்:

قَالَ إِنَّكَ لَن تَسۡتَطِيعَ مَعِيَ صَبۡرٗا ٦٧

وَكَيۡفَ تَصۡبِرُ عَلَىٰ مَا لَمۡ تُحِطۡ بِهِۦ خُبۡرٗا ٦٨

قَالَ سَتَجِدُنِيٓ إِن شَآءَ ٱللَّهُ صَابِرٗا وَلَآ أَعۡصِي لَكَ أَمۡرٗا ٦٩

பொருள்: அதற்கு அவர் பதிலளித்தார்: “என்னோடு பொறுமையாய் இருக்க திண்ணமாக உம்மால் இயலாது. மேலும், உமக்கு சரியாகத் தெரியாத விஷயத்தில் எவ்வாறு உம்மால் பொறுமையாய் இருக்க முடியும்...?” அதற்கு மூஸா கூறினார்: “இன்ஷா அல்லாஹ் (இறைவன் நாடினால்) நீங்கள் என்னைப் பொறுமையாளராகக் காண்பீர்கள். எந்த விவகாரத்திலும் உங்களுக்கு நான் மாறு செய்யமாட்டேன்!” (அல்-கஹ்ஃபி: 67-69)

மேற்கண்ட வசனங்களில் அல்லாஹ் கூறும் கூற்றுகள் முற்றிலும் உண்மையானதாகும். சரியான, உண்மையானக் கல்வியறிவைப் பெற வேண்டுமெனில் பொறுமையும் தொடர் முயற்சியும் அவசியமாகும். இன்று சிலர், சன்மார்க்கம் சம்பந்தமானத் தகவல்களைப் பெறுவதில் மிகத் தீவிரமாக உள்ளார்கள்; ஆனால், அவற்றின் மூலங்களை ஆராய்ந்தறிந்து கொள்ள முயற்சிப்பதில்லை. அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஆசிரியரிடமிருந்து கல்விகளைக் கற்றுக் கொள்ள முயற்சிக்காமல் இணைய தளங்களிலிருந்து நாம் பெறும் தகவல்கள் முறையான கல்வியறிவுகளாக இருக்க வாய்ப்பில்லை. அவை வெறும் தகவல்களாகவே இருக்க முடியும்; அவை பொய்யாக இருக்கவும் வாய்ப்புள்ளது. ஒருவேளை அவை உண்மையாக இருந்தாலும் அவற்றை உண்மையாகவும் நேர்மையாகவும் புரிவது அவசியமாகும். அதற்கான விரிவான விளக்கத்தை ஒரு ஆசிரியரிடம் தான் பெற முடியும்.

இறைத்தூதர் மூஸா (அலை) மற்றும் இறைத்தூதர் ”கிள்ர்” அவர்களின் வரலாற்றில் காணப்படும் பாடங்களையும் ”ஹிக்மத்” எனும் நுட்பமான அறிவுகளையும் நாம் அறிவதன் மூலம், ஒழுக்க மாண்புகளுடன் கூடிய கல்விமான்களாக நாம் ஆகுவோம் என நம்புகிறோம். ஒரு கல்வியறிவுமிக்க நபர் எவ்வாறு இருப்பாரோ அவ்வாறு ஆகுவோம் எனவும் நம்புகிறோம். ஆமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلاَوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوْهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.